ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of January 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண்.1098/பக5(1)/2022 - 1, நாள் 28.01.2022**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள். (இணைப்பு)
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை – 01 / 08 / 35. (இணைப்பு)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள். (இணைப்பு)

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் - 2010-2011-ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட 135 அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட 675 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கான ஊதிய கொடுப்பாணை வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.142, பள்ளிக் கல்வித்(மேநிக2) துறை, நாள் 20.05.2010.
2. அரசாணை (நிலை) எண்.177, பள்ளிக் கல்வித்(மேநிக2) துறை, நாள் 05.07.2010.
3. அரசாணை (1டி) எண்.558, பள்ளிக் கல்வித்[பக5(1)] துறை, நாள் 09.08.2018
4. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.021972/ எல்/இ3/2021, நாள் 12.01.2022.

******

பார்வை 1ல் காணும் அரசாணையில், 125 அரசு / நகராட்சி / மாநகராட்சி / உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அனுமதி அளித்தும், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் 5 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 625 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300 – 34800 + ரூ.4600 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. பார்வை 2ல் காணும் அரசாணையில், 10 அரசு / நகராட்சி / மாநகராட்சி / உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அனுமதி அளித்தும், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் 5 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 50 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300 - 34800 + ரூ.4600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. பார்வை 3ல் காணும் அரசாணையில் மேற்காணும் பணியிடங்களுக்கு கடைசியாக 01.06.2018 முதல் 31.05.2021 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

4. மேற்காணும் தற்காலிக பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேலே குறிப்பிட்டுள்ள தற்காலிக பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை மேலும் மூன்றாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள பணியிடங்களுக்கு ஜனவரி 2022- ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.கு.எண். 3439/கல்வி-II/2022, நாள் 28.01.2022-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு முதன்மைச் செயலாளருக்காக

**நகல்**

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6. (இணைப்பு)

மாநிலக் கணக்காயர், சென்னை-18. (இணைப்பு)

நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண். 021972/எல்/இ3/2021, நாள்: 29.01.2022

இணை இயக்குநர் (...)

பள்ளிக் கல்வி ஆணையரகம்,

சென்னை-600 006.